# வேலணை மத்திய கல்லூரியின் முன்னாள் ஆசிரியை திருமதி சின்னையாவின் சிந்தனையிலிருந்து....



வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடாவின் 22வது ஒன்றுகூடல் 6-8-2017 அன்று மில்லிகென் பூங்காவில் தலைவர் இளஞ்செழியன் தலைமையில் மிக விமரிசையாக நடந்தேறியது. மூன்று தசாப்தங்களின் பின்னர் காணும் காணும் மாணவர்களை என்னால் அடையாளங் காண முடியுமா என்ற தவிப்பு என்னிடம் எழுந்தது. ஆனால் என் அன்பு மாணவர்களைக் கண்டதும் அடையாளங் கண்டு விட்டேன்.

வயதிற்கேற்ப வளர்ந்திருந்தாலும் அந்தக் குழந்தை முகங்களில் அதிக மாற்றம் இல்லை. தலைவர் செழியன் அவரது நிர்வாகசபை உறுப்பினர்கள் எல்லோரையும் அன்று போல் இன்றும் கண்டேன். வாசலை நான் அணுகியதும் செழியனின் ஆரவாரமான அழைப்பில் அனைவரும் திரண்டு வந்து தந்த வரவேற்பு மறக்க முடியாதது.

விருந்தினர்கள் மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டபின் பலரையும் சந்தித்து அளவளாவ முடிந்தது. அப்போது 'தந்தை மகற்காற்றும் உதவி அவையத்தில் முந்தியிருப்பச் செயல்' என்னும் குறள் என் உள்ளத்தை நெருடியது. தான் கற்பித்த மாணவர்கள் உயர்நிலையில் இருப்பதைக் காணும் போது தன் கற்பித்தல் பயனுடையது என்ற திருப்தி ஏற்படுகிறது. சங்கத் தலைவர் செழியனும் அவரது நிர்வாகசபை உறுப்பினர்களும் பரஸ்பர புரிந்துணர்வோடு செயற்படுகின்றனர் என்பதை உணர முடிந்தது.

பாடசாலை மேல் கொண்ட பற்றும் ஆசிரியர்களின் பால் காட்டும் மரியாதையும் பாசமும் சொல்ல முடியாதவை. 'சோடியம் பொட்டாசியம் போன்ற உலோகங்கள் நீரில் இடப்படும் போது சத்தத்துடன் ஓடியாடி ஐதரசனைச் செம்மையாக வெளியிடுவதைப் போல சுறுசுறுப்பாக இருந்து உங்கள் ஆற்றலை வெளி விடுங்கள்' என்று என்றோ ஒரு நாள் நான் கூறியதை நினைவு கூர்ந்த என்னருமை மாணவன் செழியன் என்றும் இத்தகு துடியாட்டத்துடன் கூடிய செயல்வீரனாகத் திகழ வேண்டுமென்று நான் மனதார வாழ்த்துகின்றேன். நல்லவரைத் தூற்ற நாலுபேர் இருப்பார்கள் என்பதை நினைவில் கொண்டு ஒருபோதும் மனந்தளராது செயற்பட வேண்டுமென்று நான் செழியனைக் கேட்டுக் கொள்கின்றேன்.

விருந்தினர்களை வரவேற்ற முறை எல்லோருக்கும் உணவழித்த பாங்கு எமது புராதன கூழ் போன்ற உணவு விரும்பியபடி சாப்பிடுவதற்கான சைவ அசைவ உணவுகள் சிற்றுண்டிகள் அடிக்கடி தேனீர் உபசாரம் என்பன எமது பழைய கிராம வாழ்க்கையை நினைவூட்டியது.

கூட்ட ஆரம்பத்தில் பாடசாலைக்கொடி ஏற்றப்பட்டுக் கல்லூரிக்கீதம் இசைக்கப்பட்டது. முழுநேரமும் எமது பாடசாலைக் கொடி கனடா மண்ணில் பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருந்தது. கயிறிழுத்தல் சாக்கோட்டம் போன்ற தாயக விளையாட்டுக்களும் நவீன விளையாட்டுக்களும் இடம் பெற்றிருந்தன.

வெற்றி பெற்றோருக்கு உடனடியாகச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டமை செழியனின் நிர்வாகத்திறமைக்குச் சான்றானது. விருந்தினர்களுக்கு மாலையணிவித்து வரவேற்றமை சிறப்பு. எனக்கு மாலையணிவித்து முழுநேரமும் எனக்காக அர்ப்பணித்த நிர்மலாவிற்கும் ஜெயாவிற்கும் என் மனப்பூர்வமான நன்றி. அத்துடன் நான் களைப்படையும் போது தேனீர் தந்து உபசரித்த பொன் பஞ்சலிங்கத்தை மறக்கத் தான் முடியுமா? என்னைப் பணிவுடன் அழைத்துச் சென்று மீண்டும் வீட்டில் விட்டுச்சென்ற மாணவன் சிவராமிற்கும் நான் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

பாடசாலையின் பெருமையையும் ஆசிரியர்களின் கற்பித்தலையும் மேலோங்கச் செய்த என் மாணவர்கள் அனைவருக்கும் என் நன்றிகள். விசேடமாகச் செழியனுக்கு என் மனப்பூர்வமான வாழ்த்துக்கள். செழியனின் அன்பான மனைவியும் மகளும் நீண்ட ஆயுளோடு பல்லாண்டு சிறப்பாக வாழ வாழ்த்துகின்றேன்.

**முன்னாள் ஆசிரியை**
**திருமதி புஸ்பராசவதி சின்னையா**

B Sc- Dip in Ed- M Phil Ed (Sri Lanka)

